சாத்தான்குளம் காவல் நிலையத்தில்

தந்தை – மகன் உயிரிழக்க காரணமானவர்களுக்கு உரிய தண்டனை பெற்று தருவோம்

அமைச்சர் சி.வி.சண்முகம் உறுதி

மரணங்களை வைத்து அரசியலாக்கும் ஸ்டாலினுக்கு கண்டனம்

‘இனியும் தரம் கெட்ட போக்கை தொடர்ந்தால் தி.மு.க. முகமற்று அழியும்’

சென்னை, ஜூலை 2–

சாத்தான்குளத்தில் தந்தை – மகன் உயிரிழக்க காரணமானவர்களுக்கு அரசு உரிய தண்டனையை பெற்றுத் தரும் என்று சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் கூறினார்.

இந்த மரணங்களை அரசியலாக்கி தி.மு.க. சதி செய்கிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

தரம் கெட்ட போக்கை இனியும் ஸ்டாலின் தொடர்ந்தால் தி.மு.க. முகமற்று அழியும் என்றும் அவர் கூறினார்.

சட்டத்துறை அமைச்சர் சி.வி. சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் ஆகிய இருவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர்கள் இருவரையும் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், உடல்நிலை சரியில்லாமல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளனர்.

இது வழக்கமான ‘லாக்கப்’ மரணங்கள் போல் இல்லாமல், காவலர்கள், அரசு மருத்துவர், நீதிபதி, சிறை அதிகாரிகள் என பலர் மீதும் கடும் குற்றச்சாட்டுகளும், கவனக்குறைவு புகார்களும், காவலர்கள் மீது குற்றச்சாட்டு எழுந்திருக்கும் நிலையில், முன்வைக்கப்படும் பலதரப்பட்ட ஐயங்களுக்கு விடை கண்டு, அவர்களில் தவறு இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையாக தண்டிக்க வேண்டிய தலையாய பொறுப்பு தமிழ்நாடு அரசின் முன் நிற்கிறது.

சிபிஐ விசாரணை

மேலும் இவ்வழக்கை, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை நேரடியாககண்காணித்துஉத்தரவுகளை பிறப்பித்து வருகிறது. இதற்கிடையில் நடைபெற்று இருக்கும் சம்பவத்தின் கடுமை கருதி, எவ்வித ஐயங்களுக்கும் இடம் தந்துவிடக்கூடாது என்னும் நோக்கத்தோடு, இவ்வழக்கை மத்திய அரசின் புலனாய்வு அமைப்பான சிபிஐ வசம் ஒப்படைக்க அம்மாவின் அரசு முடிவெடுத்திருக்கிறது.

உடல் கூராய்வு முடிவுகள் மற்றும் முதற்கட்ட விசாரணையை தொடங்கி இருக்கும் நீதிபதி பாரதிதாசனின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், குற்றத்திற்கு உரியவர்களை இனம் கண்டு, அவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகள் கடுமையாக தொடரவிருக்கிறது.

அரசியல் ஆதாயம் தேடும் ஸ்டாலின்

அதே வேளையில், இவ்வழக்கு விசாரணைக்கு, குந்தகம் விளைவிக்கும் நோக்கத்தோடும், அப்பாவி இருவரது இறப்பை வைத்து, அரசியல் ஆதாயம் தேடும் தி.மு.க.வும், அதன் தலைவர் மு.க. ஸ்டாலினும் திட்டமிட்டு சூழ்ச்சிகள் செய்வதாக தோன்றுகிறது. இதற்காக அவரது குடும்ப தொலைகாட்சிகளும், அவர்களின் கூட்டணி கட்சி ஊடகங்களும், அரசின் மீது பழி போடும் நோக்கத்தோடு செயல்பட்டு வருவதை உணர முடிகிறது.

"Justice for Jayaraj and Benicks" என்னும் பதாகைகளை தூக்கி பிடிப்பதும், விசாரணையை நடத்த சென்ற நீதிபதியை, காவலர்கள் மிரட்டியதாக சொல்லப்பட்டு இருக்கும் குற்றச்சாட்டு உட்பட இவ்விவகாரங்களில், நீதிமன்றம், காவல்துறை ஆகியவற்றுக்கு போட்டியாக, அதற்கும் மேலானவர்களாக தங்களை காட்டிக்கொள்ளும் தி.மு.க, தாங்களே ஒரு விசாரணை அமைப்பை நடத்துவது போல நாடகம் ஆடி, வழக்கின் போக்கை குலைப்பதற்கும், அரசியலாக்குவதற்கும், குடும்ப ஊடகங்களை வைத்து தி.மு.க சதி செய்து வருகிறது. இதிலும் அரசியல் ஆதாயம் தேடும் மு.க.ஸ்டாலினின் செயல்பாடுகளை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

உரிய தண்டனை பெற்று தருவோம்

அம்மாவின் அரசு, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதி கொண்டுள்ளது. தந்தை மகன் உயிரிழக்க காரணமானவர்களுக்கு, உரிய தண்டனையை, உட்சபட்ச தண்டனையாக பெற்று தரும் என்பது நிச்சயம்.

எல்லோரது ஆசாபாசங்களையும், கனிவு கொண்ட அம்மாவின் அரசு அறிந்திருக்கிறது. ஒரு தந்தையை, ஒரு சகோதரனை, ஒரு கணவனை, ஒரு மகனை இழந்து நிற்கும் ஒரு குடும்பத்தின் வலி எத்தகையது என்பதை நாங்களும் உணர்ந்திருக்கிறோம். உயிர்களையும், உறவுகளையும் இழந்து வாடுபவர்கள் நிலைநாட்ட விரும்புகிற நீதியை, இந்த அரசு அவர்களுக்கு நிச்சயம் உரித்தாக்கும்.

ஆனால் எதிர்கட்சி தலைவர் ஸ்டாலின் இச்சம்பவத்தை அரசியலாக்கி, வழக்கம் போலவே ‘‘முதலமைச்சர் பதவி விலக வேண்டும்" அந்த பதவியில் தான் அமர வேண்டும் என்னும் அதிகார பித்து பிடித்தவராக, பின்னால் இருந்து எழுதி தரப்படும் அவதூறுகளை அறிக்கைகளாக அன்றாடம் வெளியிட்டு வருகிறார்.

கருணாநிதி டாக்டர் பட்டம் பெற்றபோது…

அன்று கருணாநிதிக்கு டாக்டர் பட்டம் கொடுத்ததை எதிர்த்து போராட்டம் நடத்திய அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர் உதயகுமாரை அடித்து கொலை செய்துவிட்டு, பெற்றவர்களை பிடித்து வந்து, தங்கள் பிள்ளையே இல்லை என்று சொல்ல வைத்த இவர்களை விட, பெற்றோரது உன்னதத்தை உணர்ந்தவர்கள் நாங்கள்.

பட்டபகலில், மதுரை உயர்நீதிமன்றத்திற்கு எதிரில், பத்திரிகை ஊழியர்கள் மூவரை எரித்து படுகொலை செய்துவிட்டு, இன்று இவர்கள் ஜீவகாருண்யம் பேசுவது, ரத்த காட்டேரி, தான் சுத்த சைவம் என்று சொல்வதற்கு சமம்.

தி.மு.க. வை வளர்ப்பதற்கு தன் உயரம் தேயத் தேய உழைத்த தா.கிருட்டிணனை, தார் சாலையில் வெட்டி போட்டு நடைபயிற்சியை கொலை பயிற்சியாக்கிய, கொடியவர்களின் கூடாரம், குற்றவாளிகளின் நாற்றங்கால் தான் தி.மு.க என்பதை இந்த நாடறியும்.

இவ்வளவு ஏன்….? ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் தொடர்புடைய, உஸ்மான் சாகித் பல்வாவை, மு.க. ஸ்டாலின் இரண்டு முறை சந்தித்து பேசினார் என்றும், அதுசமயம் கருணாநிதி பெயரிலான தொலைகாட்சியினைத் தொடங்க தேவையான பெருந்தொகை தி.மு.க விற்கு தரப்பட்டது என்பதையும், சி.பி.ஐ.யிடம் வாக்குமூலமாக கொடுத்த பெரம்பலூர் சாதிக்பாட்ஷா, அடுத்த இரண்டு நாளிலேயே மர்மமாக இறந்தார் என்றும், இதற்கு ஸ்டாலின்தான் காரணம். அதற்கான ஆதாரம் தன்னிடம் இருப்பதாக" கொலைப்பழி சுமத்திய வைகோவை மறுமாதமே மு.க. ஸ்டாலின் தன்னோடு கூட்டணியில் சேர்த்துக்கொண்டது ஏன்..? எதனை மூடி மறைக்க….?

சாத்தான்குளத்துக்கு மகனை அனுப்பியது ஏன்?

அதுபோலவே, ஸ்டாலினின் அனைத்து உள்விவகாரங்களையும் அறிந்தவராக, அவரது பதினைந்து வருட நிழல் நண்பராக இருந்த, அண்ணாநகர் ரமேஷ், அவரது மனைவி, மற்றும் மூன்று பிள்ளைகள் உட்பட ஐந்து பேரும் தற்கொலை செய்து கொண்டபோது, அருகில் இருந்த அண்ணாநகருக்கு செல்லாதவர்கள், இப்போது மட்டும் தன் மகனை இ–பாஸ் வாங்காமல், தொற்றுநோய் காலத்தில் தூத்துக்குடி வரை அனுப்பி வைத்தது எதற்காக என்பதை மக்கள் அறிவார்கள்.

எனவே அவதூறுகளால் மட்டுமே அதிகாரத்தை கைப்பற்றி விடலாம் என்று கனா காண்பதையும், கணக்கு போடுவதையும், விட்டுவிட்டு, நெறி சார்ந்த அரசியலை மு.க. ஸ்டாலின் இனியாவது கற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாது, தர்மத்திற்கு மாறான, தரம்கெட்ட போக்கை இனியும் அவர் தொடருவாரானால், தி.மு.க முகமற்று அழியும் என்பது நிச்சயம்.

இவ்வாறு அமைச்சர் சி.வி. சண்முகம் கூறியுள்ளார்.

செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், ராணிப்பேட்டை

புதிய மாவட்ட கலெக்டர் அலுவலகங்களுக்கு கட்டிடம்: அரசாணை வெளியீடு

சென்னை, ஜூலை 2–

செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், ராணிப்பேட்டை புதிய மாவட்ட கலெக்டர் அலுவலக கட்டிடங்கள் கட்ட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து வருவாய்த் துறை வெளி யிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டிருப்பதாவது: – வேலூர் மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டு ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. இது தொடர்பாக அரசுக்கு வருவாய் நிர்வாக ஆணையர் கடிதம் எழுதியிருந்தார். அதில், ராணிப்பேட்டை மாவட்ட கலெக்டர் அலுவலகம் மற்றும் பல அலுவலகங்களுக்கான புதிய கட்டிடம், ராணிப்பேட்டையில் உள்ள கால்நடை மற்றும் தடுப்பு மருந்துகள் வளாகத்தில் (ஐ.வி.பி.எம்.) கட்ட பரிசீலிக்கப்பட்டுள்ளது.

அதுபோல, திருப்பத்தூர் மாவட்ட கலெக்டர் அலுவலகம் மற்றும் பல அலுவலகங்களுக்கான புதிய கட்டிடம், திருப்பத்தூர்நகரகத்தில்எஸ்.நம்பர்325என்ற இடத்திலும், காஞ்சீபுரம் மாவட்டத்தில் இருந்து பிரித்து உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டத்துக்கான புதிய கலெக்டர் அலுவலக கட்டிடம் மற்றும் பிற அலுவலக கட்டிடங்களை செங்கல்பட்டில் உள்ள எஸ்.நம்பர் 181, 179 ஏ, 93/ஏ1 மற்றும் 182 என்ற இடத்துக்கு உட்பட்ட பகுதியிலும், விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்துக்கான கலெக்டர் அலுவலகம் மற்றும் பிற அலுவலங்களுக்கான புதிய கட்டிடம் கள்ளக்குறிச்சியில் உள்ள வீரசோழபுரம் கிழக்கில் (40.18 ஏக்கர் பரப்பளவில்) கட்டவும் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகம் கட்ட ரூ.104 கோடி நிதி ஒதுக்கி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. மாவட்ட கலெக்டர் அலுவலகத்துக்காக 3 லட்சம் சதுர அடி பரப்பளவில் தரைதளம் உள்பட 8 மாடி கட்டிடங்கள் கட்டப்படவுள்ளன. மேலும் இந்த வளாகத்தில் கலெக்டர் குடியிருப்பு, மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம் மற்றும் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு குடியிருப்பு, விளையாட்டு மைதானம் உள்ளிட்டவை கட்டப்படவுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

First Financial Services Limited

CIN: L85100TN1984PLC011231

Regd Office: 52, F3, 1st Floor, Diamond Block, Gandhi Main Road, Sri Krishna Vatika Appt, Puzhal Chennai

Contact no. 9176898788 **Email:** firstfinancialserviceslimited@gmail.com **Website:** www.ffslonline.com

AUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND FINANCIAL YEAR ENDED 31.03.2020

(Rs. in Lacs)

Particulars	Audited Results for the quarter ended 31.03.2020	Year to date financial results for the 31.03.2020	Audited financial results for the quarter ended 31.03.2019
Total income from operations(net)	14.86	197.14	19.45
Net Profit /(Loss)from ordinary activities after tax	(34.28)	(226.86)	(60.17)
Net Profit /(Loss)for the period after tax (after Extra ordinary items)	(34.28)	(226.86)	(60.17)
Equity Share Capital	807.48	807.48	807.48
Reserves(excluding Revaluation Reserve as shown in the Balance Sheet of previous year)	-	-	-
Earnings PerShare (before extraordinaryitems) (Equity Shares ofRs. 1 /-each)			
Basic:	(0.04)	(0.28)	(0.07)
Diluted:	(0.04)	(0.28)	(0.07)
Earnings PerShare (after extraordinaryitems) (Equity Shares of Rs. 1 /-each)			
Basic:	(0.04)	(0.28)	(0.07)
Diluted :	(0.04)	(0.28)	(0.07)

Note: 1) The above is an extract of the detailed format of Quarterly Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015.The full format of the Annual and Quarterly Financial Results are available on the website of Stock Exchange and the listed entity (www.bseindia.com).

For **First Financial Services Limited**
Sd/-
Nirmal Singh Mertia
Whole Time Director
DIN-03584434

Place: Mumbai
Date: 30/06/2020

மாவட்டம், ஒன்றியம், நகரம், பேரூராட்சி, ஊராட்சிகளில்

அண்ணா தி.மு.க. தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் நியமனம்: பட்டியல் தயாரிக்க எடப்பாடி, ஓ.பன்னீர்செல்வம் உத்தரவு

சென்னை, ஜூலை 2–

அண்ணா தி.மு.க. தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கு மாவட்டம், ஒன்றிய, நகர, பேரூராட்சி மற்றும் பகுதி அளவில் நிர்வாகிகளும், மாநகராட்சி வட்டம், நகர வார்டுகள் மற்றும் ஊராட்சிகளுக்கு தலா ஒருவர் வீதம் நியமனம் செய்ய நிர்வாகிகளுடன் ஆலோசித்து பட்டியல் தயாரிக்க மாவட்ட செயலாளர்களுக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் உத்தரவிட்டுள்ளனர்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தகவல் தொழில் நுட்பம் என்பது இன்றைய காலக் கட்டத்தில் மிகவும் இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளது. தகவல் தொழில் நுட்பப் பிரிவிற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூராட்சி மற்றும் பகுதி அளவில் நிர்வாகிகளும், மாநகராட்சி வட்டம், நகர வார்டுகள் மற்றும் ஊராட்சிகளுக்கு தலா ஒருவர் வீதமும் நியமனம் செய்வதற்கான பணிகள் நடைபெற உள்ளன.

ஆகவே, மாவட்டக் கழகச் செயலாளர்கள், தங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக தகவல் தொழில் நுட்பப் பிரிவின் மண்டலச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட அளவில் பணியாற்றி வரும் நிர்வாகிகளையும் கலந்து ஆலோசித்து, கழக தகவல் தொழில் நுட்பப் பிரிவிற்கு நிர்வாகிகள் பட்டியலை தயார் செய்து, மாவட்ட கழகச் செயலாளர்கள் தலைமைக் கழகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் கூறியுள்ளனர்.

சிறப்பு மருத்துவ
கோட்டம் - 54

ராயபுரம் மண்டலம், 57வது வார்டு அண்ணா பிள்ளை தெருவில் நடைபெற்ற காய்ச்சல் சிறப்பு மருத்துவ முகாமினை அமைச்சர் டி.ஜெயக்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொது மக்களுக்கு மறுபயன்பாட்டுடன் கூடிய முகக்கவசங்கள் மற்றும் ஊட்டச்சத்து மாத்திரைகளை வழங்கினார். மாவட்டச் செயலாளர் நா.பாலகங்கா உடன் உள்ளார்.

CCAL

கெம்பேப் ஆல்கலீஸ் லிமிடெட்

CIN: L24290TN2009PLC071563

பதிவு அலுவலகம்: ‘‘டீம் ஹவுஸ்’’, ஜி.எஸ்.டி. சாலை, வண்டலூர், சென்னை 600 048.

Website: www.chemfabalkalis.com Email: cosecy@drraoholdings.com

Phone: +91 44 22750323 Fax No: +91 44 22750860

கம்பெனி பங்குதாரர்களின் கவனத்திற்கான அறிவிப்பு

11வது வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தகவல்

கம்பெனிகள் சட்டம் 2013ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழுள்ள விதிகள் மற்றும் செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (‘‘SEBI’’) (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் (‘‘MCA’’) வெளியிடப்பட்ட ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 17/2020, மே 5, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 20/2020 மற்றும் இதர பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் மற்றும் செபி–ன்படி, (கூட்டாக "தொடர்புடைய சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது) வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களை செயல்படுத்த கம்பெனியின் பதினோராவது வருடாந்திர பொதுக்கூட்டம் ("AGM") வீடியோ கான்பரன்சிங் (‘‘VC’’) அல்லது பிற ஆடியோ விஷுவல் வழிமுறைகள் (‘‘OAVM’’) மூலமாக புதன்கிழமை, ஜூலை 29, 2020 அன்று இந்திய நேரப்படி காலை 10.00 மணிக்கு நடைபெறுகிறது. https://www.evotingindia.com/லிங்க்கில் VC/OAVM வசதி மூலமாக உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம். கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 103ன் கீழ் குறைந்தபட்ச எண்ணிக்கையை கணக்கிடுவதற்காக VC/OAVM மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் கணக்கிடப்படுவார்கள். தொடர்புடைய சுற்றறிக்கைகளை கடைப்பிடிக்கும் வகையில், வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, 2019–20 நிதி ஆண்டுக்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள், இதர தேவைப்படும் ஆவணங்கள் ஆகியவை கம்பெனி/டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியில் உள்ள கம்பெனியின் உறுப்பினர்களுக்கு ஜூன் 30, 2020 அன்று அனுப்பப்பட்டுள்ளது. மேற்சொன்ன ஆவணங்கள் கம்பெனியின் வலைதளம் www.chemfabalkalis.com மற்றும் பங்குச் சந்தைகளின் வலைதளம் அதாவது பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா வலைதளம் www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகியவற்றில் உள்ளது.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் இந்த அறிவிப்பு புழக்கத்தில் வைத்த தேதி முதல் வருடாந்திர பொதுக்கூட்ட தேதி வரை உறுப்பினர்கள் கட்டணம் ஏதுமின்றி மின்னணு முறையில் பார்வையிடலாம்.

அந்த ஆவணங்களை பார்வையிட விரும்பும் உறுப்பினர்கள் ccaldcs@drraoholdings.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கான தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவிற்கான வழிமுறை:

வருடாந்திர பொதுக்கூட்டத்தில் திட்டமிட்டுள்ள தீர்மானங்கள் மீது அதன் உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்கும் உரிமைக்கு தேவையான வசதிகளை கம்பெனி அளிக்கிறது (‘‘இ–வோட்டிங்’’). கீழ்க்குறிப்பிட்டுள்ள தேதிகளில் மின்னணு வாக்குப்பதிவு முறையை உபயோகித்து தொலைதூர வாக்குப்பதிவின் மூலம் அவர்களின் வாக்குகளை அளிக்கலாம். (‘‘தொலைதூர வாக்குப்பதிவு’’).

மேலும், வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு முறையின் மூலம் வாக்களிக்கும் வசதி செய்யப்படும் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலமாக வாக்களிக்காமல் VC/OAVM மூலமாக வருடாந்திர பொதுக்கூட்டத்தில் ஆஜராகும் உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டதில் வருடாந்திர பொதுக்கூட்ட மின்னணு வாக்கு முறையில் வாக்களிக்கலாம். மின்னணு வாக்குப்பதிவு வசதிக்காக சிடிஎஸ்எல் சேவைகளுக்கு கம்பெனி ஏற்பாடு செய்துள்ளது. மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்ட் விவரங்கள் உள்ளிட்ட தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் மின்னஞ்சல் மூலமாக உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது மற்றும் அவை ஆண்டறிக்கையில் உள்ளது. VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள அதே உள்நுழைவு சான்றுகளை பயன்படுத்த வேண்டும். டீமெட்டிரியலைஸ்ட் முறை, காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள மற்றும் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்களிப்பதற்கான முறைகள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ளது. அவை கம்பெனியின் வலைதளம் www.chemfabalkalis.com மற்றும் பங்குச் சந்தைகளின் வலையதளத்தில் அதாவது பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் முறையே www.bseindia.com மற்றும் www.nseindia.comல் உள்ளது.

பின்வரும் காலகட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதி கிடைக்கும்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு துவக்கம்: ஞாயிற்றுக்கிழமை, ஜூலை 26, 2020 அன்று காலை 9.00 மணி

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடிவு: செவ்வாய்க்கிழமை, ஜூலை 28, 2020 அன்று மாலை 5.00 மணி.

மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படமாட்டாது மற்றும் மேற்சொன்ன காலத்திற்கு பின்னர் சிடிஎஸ்எல்–லினால் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடக்கப்படும்.

கட் ஆப் தேதியான புதன்கிழமை, ஜூலை 22, 2020 அன்று பங்கேற்பாளர்களால் பராமரிக்கப்படும் பயனுள்ள உரிமையாளர்கள் பதிவேட்டில் பதிவாகி உள்ள பெயர்களில் இருக்கும் உறுப்பினருக்கு மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியை பெற உரிமை உள்ளது அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்று மின்னணு வாக்குப்பதிவு முறையில் வாக்களிக்கலாம்.

மின்னஞ்சல் முகவரியை கீழ்க்கண்ட முறையில் உறுப்பினர்கள் பதிவு செய்யலாம்/புதுப்பிக்கலாம்: கம்பெனியில் அவர்களின் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத/புதுப்பிக்காத காகித முறையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள், போலியோ எண், சுயசான்றளிக்கப்பட்ட பான் கார்டு நகல் போன்றவற்றை கம்பெனிக்கு எழுத்து மூலமாக அனுப்பலாம் அல்லது ccaldcs@drraoholdings.com அல்லது narasimhan@cameoindia.comக்கு தெரிவித்து அவரக்ளின் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யுமாறு/புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத/புதுப்பிக்காத டீமெட்டீரியலைஸ்ட் வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள், அவர்களின் டீமேட் கணக்குகளை பராமரிக்கும் டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் அவர்களின் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யுமாறு/புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சரியான முறையில் சரி பார்த்த பின்னர், கம்பெனி/ சிடிஎஸ்எல் அவர்களின் உள்நுழைவு சான்றுகளை பதிவு செய்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பும்.

★ வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் கம்பெனியின் உறுப்பினராகும் மற்றும் கட்ஆப் தேதியில் பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும் உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் அளிக்கப்பட்ட முறையில் பெற்றுக் கொள்ளலாம். அவை கம்பெனியின் வலைதளத்தில் உள்ளது.

★ அத்தகைய உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கம்பெனியால் குறிப்பிட்ட விதத்தில் மின்னணு வாக்குப்பதிவு வழிமுறைகளைப் பயன்படுத்தி வாக்களிக்கலாம்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க முடியாது. மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருப்பின் அது குறித்து ‘‘உதவி’’ மற்றும் ‘அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்’’ பிரிவுகளை அணுகலாம்/சிடிஎஸ்எல் வலைதளத்தில் ‘‘படியிறக்கம்’’ பிரிவில் உள்ள டிராப்டவுன் மெனு மூலம் கிடைக்கும் மின்னணு வாக்குப்பதிவு உபயோக கையேட்டை பார்வையிடலாம்.

மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதி தொடர்புடைய அனைத்து குறைகளுக்கு திரு. ராகேஷ் டால்வி, மேலாளர் (சிடிஎஸ்எல்), சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், ஏ விங், 25வது தளம், மாரத்தான் பியூச்சர், மபதலால் மில்ஸ் காம்பவுண்ட்ஸ், என் எம் ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை 400 013 அவர்களை அணுகலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு மின்ஞ்சல் அனுப்பலாம் அல்லது| 1800225533ஐ தொடர்பு கொள்ளலாம்.

கெம்பேப் ஆல்கலீஸ் லிமிடெட்டிற்காக

இடம்: சென்னை
தேதி: 01.07.2020

Dr. V. ராஜேஷ்
கம்பெனி செயலாளர்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் அழைப்பு அறிவிப்பு

வ. எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக்குறிப்பீடு எண்	மொத்தம்
1.	மேபொ/கொ&நி/வசெஅமிநி-2	30	1
2.	மேபொ/கொ&நி/வசெஅமிநி	37	1
3.	மேபொ/மிஅ/வசெஅமிநி-II	09, 10	2
	தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்		
4.	மேபொ/இ/வ/சென்னை	02	1

மின்னனு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும், திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்கண்ட இணைய தளங்களை காணவும்:

www.tangedco.gov.in , www.tantransco.gov.in , www.tenders.tn.gov.in , https://tntenders.gov.in/nicgep/app

செ.ம.தொ.இ/2434/ஒப்பந்தப்புள்ளி/2020

டாடா கேபிடல் பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 11வது தளம், டவர் ஏ, பெனின்சுலா பிசினஸ் பார்க், கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை, மகாராஷ்டிரா 400 013.

பொது அறிவிப்பு

டாடா கேபிடல் பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட் (மனுதாரர்) V/S தல்வல்கர்’ஸ் ஹெல்த் கிளப்ஸ் லிமிடெட் (பிரதிவாதி) (CARBP No.1541 of 2019) விவகாரத்தில் மாண்பமை பம்பாய் உயர்நீதிமன்றம் முறையே 2020 ஜனவரி 14, 2020, ஜனவரி 30, 2020 மற்றும் மார்ச் 9, 2020 தேதியிட்ட உத்தரவுகளைத் தொடர்ந்து. பெங்களூர், மும்பை, ஐதராபாத், கொல்கத்தா, சென்னை மற்றும் புனே உள்ளிட்ட இந்தியா முழுவதும் பல்வேறு நகரங்களில் உள்ள உடற்பயிற்சி (Gym) கருவிகள் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு **’’எங்கு எப்படி உள்ளதோ அப்படியே’’ என்ற அடிப்படையில் மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான** சீலிடப்பட்ட விலைப்புள்ளிகளை டாடா கேபிடல் பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட் வரவேற்கிறது.

மின்னணு ஏலம் தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

உடற்பயிற்சி மைய இருப்பிட விவரங்கள்	கீழே அட்டவணையில் உள்ளபடி
மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம்	16 ஜூலை, 2020 அன்று நண்பகல் 12.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை
மின்னணு ஏல இணையதள முகவரி	https://eauction.auctiontiger.net
முன் வைப்புத் தொகை (EMD)	ஒவ்வொரு உடற்பயிற்சி மையத்திற்கும் 10% முன் வைப்புத் தொகை
இஎம்டி மற்றும் கேஒய்சி சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம்	13 ஜூலை 2020, மாலை 5.00 மணி வரை
உடற்பயிற்சி கருவிகளுக்கு குறைந்தபட்ச ஏல அதிகரிப்பு தொகை	ரூ.25,000/- (ரூபாய் இருந்தைந்தாயிரம் மட்டும்)
பார்வையிடும் விவரங்கள் (மெய்நிகர்/நேரடியாக பார்வையிடு தல்) & அணுக வேண்டிய தனியார் ஒருங்கிணைப்பாளர்கள்	திரு. G. செல்வகுமார், டாடா கேபிடல் பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட், அலுவலக முகவரி : 12வது மாடி, டவர் ஏ, பெனின்சுலா பிசினஸ் பார்க், சேனாபதி பாபட் மார்க், லோவர் பரேல், மும்பை 400 013, Email: G.Selvakumar@tatacapital.com Mobile no.: 9223580241
விவரங்களுக்கு அணுக வேண்டியவர் மற்றும் சேவை அளிப்பவர் இணைய தள முகவரி (பெயர்/ தொலைபேசி எண்/இமெயில் முகவரி)	இ-புரொக்யர்மெண்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட் (ஆக்ஷன்டைகர்) பி-704-705, வால் ஸ்ட்ரீட் - II, ஓரியண்ட் கிளப் எதிரில், குஜராத் கல்லூரி அருகில், எல்லிஸ் பிரிட்ஜ், ஆமதாபாத் 380 006, குஜராத். விவரங்கள் : திரு. ராம் சர்மா, தொடர்பு எண் : 079-61200559, 6351896834 & 08000023297, Email id: ramprasad@auctiontiger.net & support@auctiontiger.net, e-Auction website: https://eauction.auctiontiger.net

உடற்பயிற்சி கருவிகள் அந்தந்த உடற்பயிற்சி மையங்களிலேயே மொத்தமாக விற்கப்படும். மேலும் ஒற்றை உபகரணங்களுக்கான சலுகைகள் எதுவும் வழங்கப்படாது. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் ரிசர்வ் விலை மற்றும் பல்வேறு இடங்களில் உள்ள உடற்பயிற்சி கருவிகளின் மாதிரி புகைப்படங்கள் உள்ளிட்ட பிற விவரங்கள் https://bit.ly/3dl7YHT என்ற இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. உடற்பயிற்சி கருவியின் விற்பனை தனியார் பெறுநர், டாடா கேபிடல் பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட் உறுதிப்படுத்தலுக்கு உட்பட்டது. மனுதாரரின் வலைத்தளம் அதாவது www.tatacapital.com.

அட்டவணை

வ. எண்	உடற்பயிற்சி மைய இருப்பிடம்	இருப்பிடம் : பெங்களூர் (வரிசை எண். 1-22), மும்பை (வரிசை எண். 23-28), ஐதராபாத் (வரிசை எண். 29-31), கொல்கத்தா (வரிசை எண். 32-34), சென்னை (வரிசை எண். 35-37) மற்றும் புனே (வரிசை எண். 38-39)
1	அக்ஷய் நகர்	3வது மாடி, எண்.12 மற்றும் 14, ஈஷான் பிளாசா, அக்ஷய் நகர் பிரதான சாலை, பேகுர் அஞ்சல், பனார்கட்டா சாலை, பெங்களூர் 560 114
2	கெடல்ஹலி (சஞ்சய் நகர்)	3வது மாடி, எண்.1/2, வினாயகா ஆர்கேட், நாகஷெட்டி ஹள்ளி, எம்எம் சாலை, சஞ்சய் நகர், பெங்களூர் 560 078
3	கிரி, பனசங்கரி	5வது மாடி, எண்.4013, ஹோஸ்கரஹள்ளி பிரதான சாலை, 80 அடி சாலை, கிரி நகர், பனசங்கரி 3வது ஸ்டேஜ், பெங்களூர் 560 085
4	ஹூடி	2வது மாடி, எண்.463, பசவன்நாநகரா பிரதான சாலை, ஹூடி, பெங்களூர் 560 048
5	ஜெபி நகர் முதல் பேஸ்	2வது மாடி, எண்.8, 9வது குறுக்கு, இந்திரா காந்தி சர்க்கிள், ஜெ.பி. நகர், முதல் பேஸ், பெங்களூர் 560 078
6	ஜெபி நகர் 7வது பேஸ்	எண்.1, 17 மற்றும் 18, கோதனூர் டின்னே பிரதான சாலை, நவோதயா நகர், ஜெபி நகர், 7வது பேஸ், பெங்களூர் 560 078
7	கோனன்குண்டே	2வது மாடி, எண்.5, சித்தம்மா ராமக்கா பாப்பண்ணா காம்பிளக்ஸ், கோனன்குண்டே குறுக்கு, கனகபுரா சாலை, பெங்களூர் 560 062
8	குட்லு	4வது மாடி, எண்.206/1, குட்லு சாலை, பெங்களூர் 560 017
9	லிங்கராஜபுரம்	எண்.12, முதல் மாடி, 7வது குறுக்கு, லிங்கராஜபுரம், சித்தார்த்தா P.U. கல்லூரி அருகில், பெங்களூர் 560 084.
10	நாகராபாவி பிரதான சாலை	2வது மாடி, எண்.39, மூதலபாளையா சர்க்கிள், நாகரபவி பிரதான சாலை, பெங்களூர் 560 072
11	நாகவரா	2வது மாடி, எண்.48/2, இசிகெயில் தொழில்பேட்டை, நாகவரா பிரதான சாலை, பெங்களூர் 560 045.
12	என்டிஇ லேயர் (வித்யா)	எண்.28, என்டிஇ லேஅவுட், நரசபுரா கிராமம், வித்யாரன்யபுரா பிரதான சாலை, வித்யாரன்யபுரா அஞ்சல், பெங்களூர் 560 097
13	பழைய விமான நிலையம் சாலை (முர்கேஷ்)	2வது மாடி, எண்.25, என்ஆர் சேம்பர்ஸ், பழைய ஏர்போர்ட் சாலை, முர்கேஷ் பால்யா, (கார்ப்பரேஷன் வங்கி மேற்புறம்), பெங்களூர் 560 017
14	ராஜாஜி நகர்	2வது மாடி, எண்.2388/ஏ, சுப்பிரமண்யா நகர் பிரதான சாலை, ‘‘ஏ’’ பிளாக் ராஜாஜி நகர், 2வது ஸ்டேஜ், பெங்களூர் 560 078
15	ராஜராஜேஸ்வரி நகர்	285/சி, 3வது மாடி, சங்கராந்தி ஆர்கேட், 9வது மெயின், முதல் பேஸ், ‘ஐடியல் ஹோம்’ ராஜராஜேஸ்வரி நகர், பெங்களூர் 560 098
16	டி.சி. பால்யா	130/2, 2வது மாடி, எஸ். ஸ்கொயர் பில்டிங், சைதன்யா பள்ளிக்கு அருகில், டி.சி. பால்யா பிரதான சாலை, ஆர்.எம். நகர், பெங்களூர் 560 016
17	உத்தரஹலி	4வது மாடி, எண்.47, 12/1, உத்தரஹலி பிரதான சாலை, பெங்களூர் 560 061
18	ஒயிட்பீல்டு	எண்.107, ஸ்ரீமாதாஜி நிவாஸ், கதவு எண்.பி 402, டிஎஸ்ஆர் கிரீன் பீல்டு அபார்ட்மெண்ட்ஸ் எதிரில், நாகொண்டஹள்ளி, ஒயிட்பீல்டு, பெங்களூர் 560 016
19	யெலங்கா	2வது மாடி, ‘சின்னாஸ் காம்ப்ளக்ஸ்’, பாகளூர் பிரதான சாலை, ரேவா பல்கலைக்கழக சர்க்கிள், கட்டிபெனஹள்ளி, யெலங்கா, பெங்களூர் 560 064
20	ஹெகனள்ளி	முதல் மாடி, HNS டவர், எண்.173-176, ஹெகனள்ளி பிரதான சாலை, பெங்களூர் 560 091
21	கோத்தனூர்	எண்.32/2, 3வது மாடி, ஹென்னூர் பிரதான சாலை, கோத்தனூர் அஞ்சல், கோத்தனூர் அஞ்சல், கோத்தனூர், தபால் அலுவலகம் அருகில், பெங்களூர் 560 077
22	லக்ரே அவுட்டர் ரிங் சாலை	ரவீந்திரன் பில்டிங், எண்.1 மற்றும் 2, 2வது மற்றும் 3வது மாடி, லக்ரே அவுட்டர் ரிங் ரோடு, பெங்களூர் 560 058
23	அந்தேரி	முதல் மாடி, குர்லா சாலை, கோகினூர் கான்டினென்டல் எதிரில், ஐசிஐசிஐ வங்கி அருகில், ஜெ.பி. நகர், அந்தேரி (கிழக்கு), மும்பை, மகாராஷ்டிரா 400 059
24	செம்பூர்	நடராஜ் தியேட்டர் பில்டிங், 3வது மற்றும் 4வது மாடி, செம்பூர் (கிழக்கு), மும்பை 400 071
25	கோர்கான்	பிரபோத்தன் கிரிடா பவன், சித்தார்த் நகர், கோர்கான் (கி), மும்பை 400 104
26	மாஹிம்	முதல் மாடி, சினிமா, கோகில் ஹவுஸ், லேடி ஜாம்ஷெட்ஜி சாலை, சிட்டி லைட் அருகில், மாஹிம், மும்பை, மகாராஷ்டிரா 400 016
27	முலந்த்	சம்ரிதி பில்டிங், முதல் மாடி, மதன் மால்வியா சாலை, ராலிபேன் எதிரில், முலந்த், மும்பை 400 080
28	வில்லே பார்லி	அசல் மனை எண்.165 (தற்போதைய மனை எண்.315), டிபிஎஸ் எண்.II, நேரு சாலை, கேம்பஸ் ஒட்டல் அருகில், கனரா வங்கி மேற்புறம், வில்லே பார்லி (கி), மும்பை
29	பஞ்சரா ஹில்	அக்சென்ட் டவர், கீழ் தளம், 10வது சாலை, எச்எஸ்பிசி எதிரில், பரோடா வங்கி எதிரில், பஞ்சரா ஹில், ஐதராபாத் 531 271.
30	ஹிமயாத் நகர்	மது நிவாஸ், கீழ் தளம், ஸ்கைலைன் தியேட்டர் எதிரில், பஷிர் பாக், ஹிமயாத் நகர், ஐதராபாத் 500 029
31	ஜூப்ளி ஹில்	முதல் மாடி, எச் எண்./1-89/41/42/43, மனை எண்.42 மற்றும் 43, காவிரி ஹில்ஸ், மாதாபூர், ஜூப்ளி ஹில்ஸ், ஐதராபாத்
32	பள்ளிகஞ்ச்	முதல் மாடி, சன்னி டவர்ஸ், 43, அஸ்தோஷ் சவுத்ரி அவென்யூ, கொல்கத்தா 700 019, தொலைபேசி : 033 40712151
33	சிஐடி சாலை	கீழ்தளம் மற்றும் முதல் மாடி, பிரிமீசஸ் எண்.13/1/1ஏ, சிஐடி சாலை, சூரா கிழக்கு சாலை, மவுஸ் அசுரா, திகி பஞ்சாங்கம், கொல்கத்தா, மேற்கு வங்கம் 700 010
34	சால்ட் லேக்	B-E/72, செக்டார் 1, நீச்சல்குளம் அருகில், சால்ட்லேக் சிட்டி, கொல்கத்தா 700 064
35	ஆழ்வார்பேட்டை	புதிய எண்.215, பழைய எண்.95, டிடிகே சாலை, ரிபோக் ஷூ ஷோரூம் பின்புறம், ஆழ்வார்பேட்டை,சென்னை 600 018
36	செகந்திராபாத்	முதல் மாடி, பி பிளாக், ஸ்ரீலா ஹைட்ஸ், செயின்ட் ஜான்ஸ் சாலை, மனை எண்.25பி/பி, கிழக்கு மாரெட்பள்ளி, செகந்திராபாத் 500 025
37	தி. நகர்	ஸ்ரீ சாய் ஹன்சா மஹால், எண்.12, ராஜா சர் தெரு, சோமசுந்தரம் மைதானம் எதிரில், தி. நகர், சென்னை 600 017
38	ஹடாப்சர்	அகர்வால் பேக்கர்ஸ் அன்ட் மூவர்ஸ் லிமிடெட்டில் சேமிக்கப்பட்டுள்ளது. மனை எண்.134, செக்டார் எண்.123, L.J.P. டிரான்ஸ்போர்ட் நகர், எம்ஆர்சி கிரேன் சர்வீசஸ் அருகில், நிக்டி புனே 411 044.
39	சங்கவி	அகர்வால் பேக்கர்ஸ் அன்ட் மூவர்ஸ் லிமிடெட்டில் சேமிக்கப்பட்டுள்ளது. மனை எண்.134, செக்டார் எண்.123, L.J.P. டிரான்ஸ்போர்ட் நகர், எம்ஆர்சி கிரேன் சர்வீசஸ் அருகில், நிக்டி புனே 411 044.

2 ஜூலை 2020 தேதியிடப்பட்டது

தனியார் பெறுநர்
டாடா கேபிடல் பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட்

கடைசி வரை பக்கவாதத்திற்கு
விழவே கிடையாதா?
யார் சொன்னது?
www.amol.co
வாருங்கள் இன்றே…
விரைவில்* குணமடைய!!
* நிபந்தனைக்குட்பட்டது
AMOL

ANIRUDHA MEDICAL ORGANISATION PRIVATE LIMITED
55, Chowdry Nagar Main Road, Valasaravakkam,
Chennai-600087.PH: 044 - 42690201, 24860700, 23634450
email: info@amol.co, helpdesk@amol.co
Valasaravakkam Perumbakkam(OMR) Mahindra City
Week days: 07.00 am - 10.00 pm & Week ends: 06.00 am - 09.00 pm
9094044422 / 9094744422